

உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, திருவெண்ணைநல்லூர் ஒன்றியம் ஏனாதிமங்கலத்தில் எரளூர் ரெட்டிவாய்க்கால் என இரு வாய்க்கால்கள் மூலம் 12 ஏரிகளுக்கும் மற்றும் ஆழங்கால், கண்டம்பாக்கம் மற்றும் மரகதபுரம் என மூன்று வாய்க்கால்கள் மூலம் 14 ஏரிகளுக்கும் வாய்க்கால்களில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் சி.பழனி, சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு விசுவநாதன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், பொதுக்குழு உறுப்பினர் பக்தவச்சலம், ஒன்றிய நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஆர்.ஒய் மோகன்ராஜ், சடகோபன், பொருளாளர் கிருஷ்ணமூர்த்தி, துணைச் செயலாளர் ஏழுமலை, விவசாய வெங்கடேசன், இளைஞர் அணி நிர்மல், இலக்கிய அணி விஜயபாபு , தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, கிருஷ்ணராஜ், விளையாட்டு மேம்பாட்டு அணி ஞான தேவா, ஊராட்சி மன்றத் தலைவர் விஜயன், கிளைச் செயலாளர் ஆறுமுகம், ராமலிங்கம் துணைத் தலைவர் சுதாகர் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று முன்தினம் (03.09.2024) திருச்சிராப்பள்ளி பன்னாட்டு விமான நிலையத்தில் குரங்கம்மை தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ) மரு.ஹர்சியா பேகம், மாவட்ட சுகாதார அலுவலர் மரு. சுப்ரமணியன், மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.மணிவண்ணன், மண்டல தலைவர் மதிவாணன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினர்

# சென்னை முப்பெரும் விழாவில் திரளாக பங்கேற்போம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, செப்.5-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற பிரம்மாண்டமான பொது உறுப்பினர்கள் கூட்டம் 03.09.2024 செவ்வாய்க்கிழமை, கீரனூர் புதுக்கோட்டை சாலையில் உள்ள ராயல் பாலிடெக்னிக் கல்லூரியில் மாவட்ட கழக அவைத் தலைவர் அரு.வீரமணி தலைமையேற்க, மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கேகே.செல்லபாண்டியன் வரவேற்புரையாற்ற, தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், எஸ்.ரகுபதி சிறப்புரையுடன் நடைபெற்றது.



கூட்டத்தில் வரலாற்று நிகழ்வாக, மாவட்ட மாநாட்டின் ஒற்றை தீர்மானமாக, கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்க வேண்டும் என்று மாவட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்ல பாண்டியன் முன்மொழிய, அமைச்சர் எஸ்.ரகுபதி, கழக நிர்வாகிகள் முன்னிலையில் பொது உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மனதாக வழிமொழிய தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. மேலும் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வுகளில், கழக அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, மேனாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கழக இலக்கிய அணி துணைத்தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கழக சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், கழக விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகர், கழக தொண்டரணி துணைச் செயலாளர் சுப.சரவணன், கழக விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், கழக வர்த்தகர் அணி துணைச் செயலாளர் செ.அசோக் பாண்டியன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், மாநகர செயலாளர் ஆ.செந்தில், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் எஸ்.எஸ்.கருப்பையா, பி.ராஜேஸ்வரி, க. மதியழகன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.சண்முகம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், விராலிமலை தொகுதி மேற்பார்வையாளர்கழக மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர்அஞ்சுகம் பூபதி, கந்தர்வகோட்டை தொகுதி பார்வையாளர் முனைவர். குறிஞ்சிவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய கழக செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், மு.க.இராமகிருஷ்ணன், என்.சேட்டு, எம்.பரமசிவம், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர். எஸ்.மாரிமுத்து ஓ.எஸ்.வெங்கடாசலம், சி. சண்முகம், வெ.முத்து கிருஷ்ணன், மா. தமிழ் அய்யா,

அ.இளங்குமரன், கே.பி. அய்யப்பன், ஆர்.ஆர்.சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம். பழனியப்பன், என்.சாத்தையா, ஆர்.செல்லத்துரை, இராசு.சந்தோஷ், எம்.செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர்கள் வை.விஜயக்குமார், பா. அண்ணாத்துரை, உ.முருகேசன், முகமது ரிஷா மற்றும் அண்டகுளம் க.ரெங்கராஜ், மு.பி. மணி, மு.கலியமூர்த்தி, எம்.எம்.பாலு, இராம. செல்வராஜ், ராய . முத்துக்குமார், மாலா ராஜேந்திரதுரை, சின்னையா, செந்தாமரை பாலு, முல்லை முபாரக், கே.எஸ்.ச.இளையச் சூரியன், சி. அரங்கநாயகம், வி.ஜி. ஆர்.மணிவண்ணன், வி. என்.எம்.பாலு, தவசுமணி, அ.பிரபா, வே. ராஜேஸ், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, சூசைராஜ், புத்தாம்பூர் சுப்பையா, எம். ராஜா, கா. இளவரசன், எஸ்.வி.ஆர். ஸ்டாலின், கவிவேந்தன், மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி, விளாப்பட்டி சிவா, அன்சாரி பாசித்,

துவாரை டி.செல்வம், கை. பழனிச்சாமி, மணிமொழி மனோகரன், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, மழையூர் ராமசாமி, வெற்றிச் செல்வன், டாக்டர் அமானுல்லா, எம்.ஏ.எம்.இம்தியாஸ், கி. சுப்பிரமணியன், சுமோபாலு, மா.மணிவேலன், முத்தழகு பழனிவேலு, பா.ரெங்கராஜ், சேட் (எ) ஷாஜகான், டி. அப்புக்காலை, எஸ்.வி.ஆர்.ராஜா, அக்ரோ செல்வம், மு.ராஜதுரை, தெய்வானை, செ.ரமேஷ், தாயினிப்பட்டி கண்ணன், ஆர். கே.தவமணி, ஆசிரியர் எம். ரமேஷ், குளத்தூர் மணிராஜன், குளவை ஓ ஆறுமுகம், எம்.கே.அறிவுடை நம்பி, டி.முரளிதரன், கலையரசன், ஆ.மரிய எட்வின், , ராயல் சபா, ரஜினிகாந்த், ஆறுமுகம், எம்.டி.ராமசாமி, சிப்காட் சந்திரசேகரன், சுந்தர்ராஜ், க.செ. மணிமாறன், எம். அரவிந்தன், சுகி (எ) சுருமாறன், காதர் கனி, கே.ஆர்.பாலமுத்து, சின்னத்துரை, விஜயகுமார், சி.மதியழகன், பால்ராஜ், சாங்கிராப்பட்டி ரவி, தமிழினியன், எழில்ராஜா, தேன்கனிப்பட்டி ராஜா, மேல விடுதி ஆறுமுகம், இதயம் அப்துல்லா , கே.எம்.எஸ். குமார், சத்தியமங்கலம் பன்னீர், ஜெயராமன், வி.ஓ.எஸ்.பன்னீர்செல்வம், மற்றும் பலர் கலந்து கொண்டனர். துணை மேயர் லியாகத் அலி நன்றி கூறினார்.

### சிகாகோ நகரில் – பேரன்பைப் பொழிந்து வரவேற்ற

# தமிழ் உடன்பிறப்புகளுக்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சிகாகோ, செப்.5-

அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ நகரிலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (03.09.2024) சிகாகோ சென்றார். சிகாகோ சென்றடைந்த பின்பு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில், “சிகாகோவில் பேரன்பைப் பொழிந்து வரவேற்ற தமிழ் உடன்பிறப்புகளுக்கு நன்றி!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு :-

**சான் பிரான்சிஸ்கோ நகரிலிருந்து சிகாகோ நகருக்கு வந்தடைந்தேன்.**

**பேரன்பைப் பொழிந்து வரவேற்று நெகிழ வைத்த தமிழ் உடன்பிறப்புகளுக்கு நன்றி!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### திருச்சிராப்பள்ளி பன்னாட்டு விமான நிலையத்தில்

# குரங்கம்மை தடுப்பு நடவடிக்கைகள் - கண்காணிப்புப் பணிகள்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - அன்பில் மகேஷ்பொய்யாமொழி நேரில் பார்வையிட்டு ஆய்வு!

திருச்சி செப். 5-

திருச்சிராப்பள்ளி பன்னாட்டு விமான நிலையத்தில் குரங்கம்மை தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்றுமுன்தினம் (03.09.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது :-

குரங்கம்மை என்பது ஒரு வைரஸ் சோனோடிக் நோயாகும். இதுவரை 120 நாடுகளில் இந்த நோய் பரவியுள்ளது. உலக சுகாதார அமைப்பினர் அறிக்கையின் படி, ஜனவரி 2022 முதல் ஆகஸ்ட் 2024 வரை ஒரு இலட்சம் நபர்களுக்கு நோய்கள் கண்டறியப்பட்டு மற்றும் 220 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் 33,556 நோயாளிகள், பிரேசிலில் 11,841 நோயாளிகளும், ஸ்பெயினில் 8104 நோயாளிகளும், டெமாகிரடிக் ரிபப்ளிக் ஆப் காங்கோவில் 4385 நோயாளிகளும், பிரான்சில் 4283 நோயாளிகளும், கொலம்பியாவில் 4286 நோயாளிகளும், யுனைடெட் கிங்டம் 4018 நோயாளிகளும், பெருவில் 3939 நோயாளிகளும், ஜெர்மனியில் 3886 நோயாளிகளும் கண்டறியப்பட்டுள்ளனர்.

பொதுவாக மருத்துவ ரீதியாக சொறி, காய்ச்சல் மற்றும் வீங்கிய நிணநீர் கணுக்கள் மற்றும் பல்வேறு மருத்துவ சிக்கல் களுக்கு வழிவகுக்கும். ஆப்பிரிக்காவிலுள்ள காங்கோ நாட்டில் வேகமாக பரவி வரும் குரங்கம்மை தொற்றால் பொது சுகாதார அவசர நிலையாக 14.08.2024 அன்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் 4 பன்னாட்டு விமான நிலையங்களில் சராசரியாக 58 லிருந்து 64 வரை பன்னாட்டு விமானங்கள் வருகின்றது. இதில் மொத்தமாக 11,850 சர்வதேச பயணிகள் சராசரியாக வருகை புரிகின்ற னர். அவர்கள் அனைவருக்கும் காய்ச்சல் மற்றும் குரங்கு அம்மை குறித்த திரையிடல் செய்யப்படுகிறது. சென்னை விமான நிலையத்தில் சராசரியாக 40 லிருந்து 45 வரை பன்னாட்டு விமானங்கள் வருகின்றது. இதில் மொத்தமாக 9000 சர்வதேச பயணிகள் சராசரியாக வருகை புரிகின்றனர்.

திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் சராசரியாக 12 முதல் 13 வரை பன்னாட்டு விமானங்கள் வருகின்றது. இதுவரை திருச்சி விமான நிலையத்தில் 192 பன்னாட்டு விமானங்கள் வந்துள்ளது. இதில் மொத்தமாக இதுவரை 27,706 சர்வதேச பயணிகள் திரையிடலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். தினசரி சிங்கப்பூர், கொலம்போ மற்றும் வாரந்தோறும் அபுதாபி, துபாய் மற்றும் ஜார்ஜா ஆகிய நாடுகளிலிருந்து சர்வதேச பயணிகள் திருச்சிக்கு வருகை புரிகின்றனர். கோயம்புத்தூர் பன்னாட்டு விமான நிலையத்தில் சராசரியாக 2 முதல் 3 வரை பன்னாட்டு விமானங்கள் வருகின்றது. இதில் சராசரியாக 500 பயனாளிகள் வருகை புரிகின்றனர். மதுரை பன்னாட்டு விமான நிலையத்தில் சராசரியாக 3 பன்னாட்டு விமானங்கள் வருகின்றது. இதில் சராசரியாக 450 பயனாளிகள் வருகை புரிகின்றனர். அனைவருக்கும் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் சென்னை, கிண்டியில் உள்ள கிங் நோய் தடுப்பு பரிசோதனை நிலையத்தில் குரங்கம்மை கண்டறியும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனை, மதுரை அரசு ராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் திருச்சி கி.ஆ.பெ.விஸ்வநாதன் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் சிறப்பு தனிமைப்படுத்துதல் வார்டு அமைக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. தமிழ்நாட்டில் குரங்கு அம்மை பாதிப்பு இதுவரை இல்லை.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், திருச்சிராப் பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ) மரு.ஹர்சியா பேகம், மாவட்ட சுகாதார அலுவலர்; மரு.சுப்ரமணியன், மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.மணிவண்ணன், மண்டல தலைவர் மதிவாணன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அரியலூர் மாவட்டம் – செந்துறை ஊராட்சி ஒன்றிய கிராமங்களில்

# ரூ.28.50 இலட்சம் மதிப்பில் - குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்!

## ரூ.42 இலட்சம் மதிப்பில் தனிநபர் சுகாதார வளாகம் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

அரியலூர், செப் 5-

அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், இருங்களாக்குறிச்சி, ஆதனக்குறிச்சி மற்றும் கோட்டைக்காடு கிராமங்களில் ரூ.28.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து, மணக்குடையான் ஊராட்சியில் ஆலத்தியூர் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் ரூ.42 இலட்சம் கட்டப்பட்டுள்ள தனிநபர் சுகாதார வளாகத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க அரியலூர் மாவட்டத்தில் கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலைகள், குடிநீர் வசதிகள், பள்ளி வகுப்பறை கட்டடங்கள், அங்கன்வாடி மைய கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் போக்குவரத்துத் துறை அமைச்சர் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகளையும் தொடங்கி வைத்து, தனிநபர் சுகாதார வளாகத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

அதன்படி செந்துறை ஒன்றியம், இருங்களாக்குறிச்சி கிராமத்தில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கீழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளையும், பின்னர், ஆதனக்குறிச்சி கிராமத்தில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கீழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளையும், அதனைத்தொடர்ந்து கோட்டைக்காடு கிராமத்தில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கீழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளையும் என மொத்தம் ரூ.28.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து, பணிகளை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, மணக்குடையான் ஊராட்சியில் ஆலத்தியூர் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் நிறுவன சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் தாமரைப்பூண்டி கிராமத்தில் 30 குடியிருப்புகள், சோழன் பட்டி கிராமத்தில் 35 குடியிருப்புகள், மணக்குடையான் கிராமம் நேரு நகரில் 35 குடியிருப்புகள் என மொத்தம் 100 குடியிருப்புகளுக்கு கட்டப்பட்டுள்ள தனிநபர் சுகாதார வளாகத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.க.கவிதா, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி. ஷீஜா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, ஆலத்தியூர் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவன துணைத்தலைவர் (உற்பத்தி) மீனாட்சி சுந்தரம், செந்துறை வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், கோட்டைக்காடு கிராமத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டம், வடக்கு மாநகர இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் இளைஞர் அணியின் 44வது ஆண்டு விழாவை முன்னிட்டு வடக்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.முத்துக்குமார் ஏற்பாட்டில் திருநீலகண்டபுரம் அரசு பள்ளியில் நடைபெற்ற மாபெரும் மருத்துவ சிகிச்சை முகாமினை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் மாநகர கழக செயலாளர்கள், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் (வடக்கு), டி.கே.டி.மு.நாகராசன் (தெற்கு) உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் குற்றாலம் மேற்கு ஒன்றிய தி.மு.க. பொதுக்கு உறுப்பினர் கூட்டம் கோமலில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் – பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகன் பேசினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஆர்.ராஜா, மாவட்ட கழக துணை செயலாளர் எஸ்.செல்வமணி, ஒன்றிய குழு தலைவர் மகேந்திரன், துணைத் தலைவர் பி.முருகப்பா மற்றும் பலர் உள்ளனர்.